www.padippakam.com



# புரட்சிகர அஞ்சலி



## ★ தோழர் க. பத்மநாபா (செயலாளர் நாயகம்)

மக்கள் இல்லாத மண்ணை நாம் நேசிக்கவில்லை
மக்களுக்காகவே மண்ணை நேசிக்கின்றோம்.

:— தோழர் க. பத்மநாபா

★ தோழர் கிருபாகரன் (மத்திய குழு உறுப்பினர்)
★ தோழர் யோகசங்கரி (பாராளுமன்ற உறுப்பினர்-யாழ்)
★ தோழர் பத்மநாதன் (வ.கி. மாகாணசபை உறுப்பினர்)
★ தோழர் அன்பு முகுந்தன் (வ.கி. மாகாணசபை உறுப்பினர்)
★ தோழர் கோமளராஜா (வ.கி. மாகாணசபை உறுப்பினர்)
★ தோழர் கவிதா

★ தோழர் முகம்மது மிஃலார் (கமலன்)
★ தோழர் லிங்கன்
★ தோழர் தர்மன்
★ தோழர் புவி
★ தோழர் ரமணன்
★ தோழர் ஜசிந்தா

### தோழர் நாபாவின புரட்சிப் பாதையில்...

1971ல் தமிழ் இளைஞர் பேரவையின் உறுப்பினராகி தன்னை மக்கள் விடுதலைக்காக இணைத்துக் கொண்ட தோழர் நாபா. 1972 ம ஆண்டில் தொடர்ந்து நடந்த 50 நாள் உண்ணாவிரதத்தின் அமைப்பாளராக வளர்ந்தார்– ஆரம்பகால தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகரில் ஒருவராகவும். ஈழப் புரட்சி அமைப்பை ஈழத்தில் வேரூன்ற வழி சமைத்தவருமாவர்– ஈழ மக்கள் புரட்சிகர, விடுதலை முன்னணியை உருவாக்கிய இவர் ஈழப் போராட்டத்தில் மலையக போராளிகளை யதார்த்த ரீதியில் ஈடுபடுத்தியவர்– சிங்கள முற்போக்கு இளைஞர்களுடன் தோழமை உறவுகளை ஏற்படுத்திய தோழர் நாபா தனது வெளிநாட்டு உயர் கல்வியை உதறி தள்ளிவிட்டு லெபனன் நாட்டில் ஆயுதப் பயிற்சியைப் பெற்றார்– ஈழத் தேசிய விடுதலை முன்னணியை உருவாக்குவதில் முக்கிய பங்கேற்ற இவர் தமிழ் மக்களுக்கு கனவாக இருந்த வடக்கு. கிழக்கு மாகாணசபையை நனவாக்கி மக்களுக்கு அமைதியைஏற்படுத்தினார்– உள் இயக்க முரண்பாடுகளை ஆயுதமின்றி விமர்சனம் சுயவிமர்சனம் மூலம் தீர்த்த ஒரே ஒரு தலைவராக விளங்கிய பெருமை தோழர் பத்மநாபாவுக்கே உரித்தானது–

உன் நீண்ட புரட்சி பாதையின் இலட்சியக் கனவுகளை நனவாக்க போராடுவோம்– அமைதியை ஜனநாயகத்தையும். சமூக நீதியை கொண்ட புதியதோர் சமுதாயம் அமைத்திடுவோம்–